# மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
Mount Druitt Tamil Study Centre

**பேச்சுப் போட்டி 2022**

Mobile: 0449 892 066 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au


## ஆண்டு 3



பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்!

# பெற்றோரை பெருமைப்படுத்துவோம்

இந்த உலகில் எப்போதும் எமக்கு நல்லதை மட்டுமே செய்பவர்கள் எம் பெற்றோர்களே. எம்மை நல்ல வழியில் வளர்ப்பதற்கும் எமது எதிர்காலம் சிறப்பாக அமையவும் அவர்கள் எமக்காக பல தியாகங்களை செய்கின்றார்கள். எமது தேவைகள் எல்லாவற்றையும் பூர்த்தி செய்ய அயராது உழைக்கின்றார்கள்.

எனவே சிறுவர்களாகிய நாங்கள் பெற்றோர்கள் கூறும் நல்ல அறிவுரைகளை பின்பற்ற வேண்டும். எப்போதும் அவர்களுக்கு கீழ்படிந்து நடக்க வேண்டும். கல்வியிலும் நல்ல பண்பிலும் சிறந்து விளங்க வேண்டும். பெற்றோர் பெருமைப்படும் பிள்ளைகளாய் வாழ்ந்து காட்ட வேண்டும் எனக்கூறி விடை பெறுகின்றேன்.

நன்றி,
வணக்கம்.

ஆக்கம் : ஆசிரியர் திருமதி. அனிதா சிவசங்கர்.

**பேச்சுப் போட்டி எதிர்வரும் 28.05.2022 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.**